பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 3 (19—9—72) செவ்வாய் வெளியூர்: புரட்டாசி 4 (20—9—72) புதன் [இதழ்: 81

## இரஷ்ய செம்மறியாடுகள் தமிழகத்திற்கு வருகின்றன

சென்னை, செப். 19—

"தமிழ்நாட்டில் கால்நடை வளத்தை மேம்பாடு செய்யும் நோக்கத்துடன், இரஷ்யாவிலிருந்து 120 செம்மறியாடுகளைத் தமிழ்நாடு அரசாங்கம் இறக்குமதி செய்திருக்கிறது" என்று நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் தெரிவித்தார்.

"கலப்பு ரக செம்மறியாடுகள் வளர்ப்புக்காக நீலகிரி--தஞ்சாவூர்--கோயமுத்தூர் ஆகிய இடங்களில் இந்த இரஷ்ய செம்மறியாடுகள் பயன்படுத்தப்படும்" என்றும் அவர் தெரிவித்தார்.

# கடமையில் கண்ணியம் தேவை

## கட்டுப்பாட்டுக்கு ஊறுதேடும் நிலை எந்நிலையிலும் இருக்கக்கூடாது

### ஒவ்வொரு சொல்லிலும் உன்னிப்பு அவசியம்

### பொதுச்செயலாளர் நாவலர் வலியுறுத்தல்

சென்னை, செப். 19—

"தி. மு. கழகத்தில் கட்டுப்பாடு மிகமிக முக்கியம்; தொண்டர்களிடம் கட்டுப்பாடு வேண்டும்; அதைப்போலவே கிளைக் கழகங்கள் – வட்டக் கழகங்கள் – சார்பு மன்றங்கள் – மாவட்டக் கழகங்கள் ஆகியவைகளிடம் கட்டுப்பாடு வேண்டும்.

அதுமாத்திரமல்ல – தலைவர்களிடமும் கட்டுப்பாடு வேண்டும்; தலைமைக் கழகத்தில் உள்ள எங்களுக்கும் கட்டுப்பாடு வேண்டும்.

ஒவ்வொரு சொல்லைச் சொல்லும்போதும் ஜாக்கிரதையாகச் சொல்லவேண்டும்; ஒவ்வொரு சொல்லையும் சொல்லும்போதும் கட்டுப்பாட்டுடன் சொல்லவேண்டும்; அது, கழகத்திற்கு ஊறுதேடுகின்ற சொல்லாக இருக்கக்கூடாது; கழகத்தின் கட்டுப்பாட்டைக் குலைக்கின்ற சொல்லாக இருக்கக்கூடாது.

ஆகவே கட்டுப்பாடு என்பது தொண்டர்கள்முதல் கிளைக் கழகங்கள் – வட்டக் கழகங்கள் – மாவட்டக் கழகங்கள் – தலைமைக் கழகம் வரையில் அவசியம் இருக்க வேண்டும்.

"நம் கடமையைக் கண்ணியத்தோடும் – கட்டுப்பாட்டோடும் ஆற்றுவோமேயானால், நம்மை அசைப்பார் எவருமே இல்லை; கழகத்தை இந்தக் கட்டுப்பாட்டு உணர்வோடு மேலும் மேலும் கட்டிக்காப்போமாக!"

என்று கழகம் பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள், கடற்கரையில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் வலியுறுத்திக் கூறினார்; பேரறிஞர் அண்ணா அவர்களை நினைவுகூர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

அனைவருடைய இதயத்திலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் எவ்வளவு நீக்கமற நிறைந்திருக்கிறார் என்பதற்கு இலட்சோப இலட்சம் மக்கள் கூடியுள்ள இந்தக் கூட்டமே ஒரு எடுத்துக்காட்டாகும்.

அண்ணா அவர்கள் இல்லாவிட்டால் நான் இல்லை -- கலைஞர் இல்லை -- நீங்கள் இல்லை -- நல்ல தமிழ் இல்லை -- வாழ்வில்லை -- வளமில்லை -- வசதி எதுவுமே இல்லை; அந்த அளவிற்கு அறிவு வழி நடந்து -- அறநெறியில வாழ்ந்து காட்டிய பெருமைக்கு உரியவர் பேரறிஞர் அண்ணா அவர்களாவார்!

கழகத்தில் இருக்கின்ற நாமெல்லாம் மிக மிகச் சாதாரணமானவர்கள்தான்; மிட்டாக்களோ -- மிராசுகளோ -- ஆதிக்க வெறியர்களோ -- ஜமீன் பரம்பரையினரோ நம்மில் இல்லை!

அண்ணா அவர்கள் சொன்னது போல், நாம் அனைவருமே கையில் காசற்றவர்கள்; ஆனால், மனதில் மாசற்றவர்கள்!

மற்ற கட்சிகளுக்கும் -- தி. மு. கழகத்திற்கும் ஒரு வேறுபாடு உண்டு; மற்றக கட்சிகளில், 'தலைவர் -- தொண்டர்' என்ற பாகுபாடு உண்டு; நம்முடைய கழகத்திலே, அண்ணன் -- தம்பி பந்தம் -- பாசம் என்ற உறவு முறைதான் உண்டே தவிர, வேறு ஏதுமில்லை; அதனால் தான், கழகம் இந்த அளவிற்கு வேரூன்றி வளர்ந்திருக்கிறது!

'கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும் -- வேட்ப மொழிவதாம் சொல்' என்றார் திருவள்ளுவர்; அப்படி மாற்றாரையும் கவர்ந்து இழுக்கக்கூடிய சொல்லாற்றல் அண்ணா அவர்களுக்கு இருந்தது;

'விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது -- சொல்லுதல் வல்லாற்பெறின்' என்ற திருக்குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார அண்ணா!

சிந்தை -- இதயம் இரண்டையும் கவர்கின்ற தன்மை அண்ணாவின் எழுத்துக்களுக்கும்--சொற்களுக்கும இருந்தது.

நெப்போலியனின் வீரத்தை -- இராசராசனின் வீரத்தை -- அலெக்சாண்டரின் வீரத்தை உலகம் போற்றும்; ஆனால் உலகம் அவர்களை இதயத்தில் வைத்திருப்பதில்லை!

நோபல் பரிசு பெற்ற சர். சி. வி. இராமனையும் ஐன்ஸ்டீனையும் உலகம் போற்றும்; ஆனால் அவர்களை இதயத்தில் வைத்திருப்பதில்லை!

ஆனால், புத்தரை--ஏசுவை--நபிகள் நாயகத்தைத்தான் மக்கள் தங்கள் இதயத்தில் வைத்திருப்பார்கள்!

அதைப்போல், தமிழ்நாட்டு மக்கள் அண்ணா அவர்களைத் தான் தங்கள் இதயத்தில் வைத்திருக்கிறார்கள்; அதற்குக் காரணம், அவர் மனிதாபிமானத்தை மதித்தார் -- மனிதப் பண்பாடு உயரப் பாடுபட்டார்!

வன்முறைச் செயல்களுக்கு இடம் தராமல் அறவழியில் நடந்தார்!

நேரு ஒரு முறை கழகம் நடத்திய அமைதிப் போராட்டத்தை 'முட்டாள்தனமானது' என்று கூறியபோது, 'மிகப் பெரிய மனிதர் மிகச் சிறிய தவறைச் செய்கிறார்' என்றுதான் அண்ணா சொன்னார்!

மிகவும் கேவலமாக இங்கே சிலர் நம்மைப் பேசியபோது கூட, 'மன்னிப்போம் -- மறப்போம்' என்றுதான் சொன்னார்!

'கத்தியைத் தீட்டுங்கள்' என்று அவர் சொன்னதில்லை! 'புத்தியைத் தீட்டுங்கள்' என்றுதான் சொன்னார்!

போராட்டத்தைத் தேடிச் சிலர் அலைகிறார்கள்; 'இன்னும் ஒரு மாதத்தில் ஏதாவது ஒரு போராட்டம்' என்கிறார் காமராசர்!

அண்ணா அவர்கள், போராட்டத்தைத் தேடி அலையமாட்டேன்--தேடிவருகின்றபோராட்டங்களைக் கண்டு ஓடி ஒளியமாட்டேன்' என்றார்!

அண்ணா அவர்கள் ஒன்றைச் சொல்லிவிட்டு -- ஒன்றை எழுதிவிட்டு அதிலிருந்து பின்வாங்கியதில்லை; அந்த அளவிற்குச் சொற்களை அளந்து பயன்படுத்துவார்!

அண்ணா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தாலும், அவர் கூறிய அறிவுரை -- அவர் ஊட்டிய எழுச்சி--அவர் வந்த கொள்கை கோட்பாடு எல்லாம் நம்மிடம் இருப்பதால்தான் கழகம் இன்று நிமிர்ந்து நிற்கிறது!

கழக அரசு இன்று மாற்றாராலும் பாராட்டத் தகுந்த -- போற்றத்தக்க அளவிற்கு வீறுநடை போடுகிறது!

அண்ணாவின் சுட்டுவிரல் நிழலில் அவருடைய அறிவு ஆற்றல் வழி நின்று — அண்ணாவின் கொள்கைகளை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டு வருகிறோம்!

அந்தக் காரணத்தால்தான், நாம் மிக மிகச் சாதாரணமானவர்களாக இருந்தும்கூட நம்மால் பலம் பொருந்திய எதிரிகளை வீழ்த்த முடிந்தது!

### வலிவுக்குக் காரணம் அண்ணாதான்!

இராஜாஜியும் --- காமராசரும் ஒன்று சேர்ந்திருந்தபோதும், அவர்களை வீழ்த்தும் அளவிற்கு நாம் வலிமை பெற்றுள்ளோம்!

'நல்லவர்கள் நம் பக்கம் உள்ளார்கள்' என்பதை 1971 தேர்தல் நிரூபித்தது; இதற்கெல்லாம் காரணம பேரறிஞர் அண்ணாதான்!

கழகத்திலே உள்ளவர்கள் மின்சாரக் கம்பி போன்றவர்கள்; கம்பிகள் சாதாரணமாக இருக்கும்போது அவை சாதாரணம் தான்; அதே கம்பியில் மின்சாரம் பாயும்போது -- அந்தக் கம்பி பெரிய சக்தியைப் பெறுகின்றது!

அதைப் போலத்தான் நாமும் வலிவு பெற்று விளங்குகிறோம் என்றால், அந்த வலிவுக்குக் காரணம், அண்ணா அவர்கள் தான்!"

## குறைந்தபட்ச போனசு 8.33 சதவிகிதம்

### பொதுத்துறை -- தனியார்துறை நிறுவனங்கட்கும் பொருந்தும்

### மத்திய அரசு முடிவு-விரைவில் அவசரச் சட்டம்

புதுடில்லி, செப். 19—

"அரசுத் துறைத் தொழில் நிறுவனங்களிலும் -- தனிப்பட்டவர்கள் நடத்தும் தொழில் நிறுவனங்களிலும பணியாற்றும் ஊழியர்கள் பெறவேண்டிய குறைந்தபட்ச போனசு, 1971--72-ம் ஆண்டிலிருந்து 8.33 சதவிகிதமாக இருக்கவேண்டும்" என்று மத்திய அமைச்சரவை முடிவு செய்தது; இந்தக் குறைந்தபட்ச போனசு முழுவதும ரொக்கமாகத் தரப்படும்.

இலாபத்தில் நடப்பதாக இருந்தாலும் நட்டத்தில் நடப்பதாக இருந்தாலும், தொழில் நிறுவனங்கள் 8.33 சதவிகிதக் குறைந்தபட்ச போனசு தொகையைக் கொடுத்தே ஆகவேண்டும்.

இந்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படக்கூடும்.

போனசு சட்டத்தையும் -- பிராவிடண்டு நிதிச் சட்டத்தையும் திருத்துவதாக நிதிச் சட்டம் அமையும்.

அரசுத் துறைத் தொழில் நிறுவனங்களுக்கு இதுவரையில் போனசு சட்டத்தின் வரம்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு வந்துள்ளது; இனிமேல், அவையும் போனசு சட்டத்தின் வரம்பினகீழ் கொண்டுவரப்படும்.

### அஞ்சல் -- தந்தி இரயில்வே ஊழியருக்குக் கிடையாதாம்

அஞ்சல் -- தந்தி, இரயில்வே துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்குப் போனசு எதுவும் கிடைக்காதாம்.

அஞ்சல் -- தந்தி, இரயில்வே ஊழியர்களுககும் போனசு அளிப்பது பற்றிப் போனசும் பரிசீலனைக் குழுவோ அல்லது மத்திய அமைசசரவையோ பரிசீலனை செய்யவில்லையாம்.

### அதிகம் பெறுவோர் நிலை -- மத்திய அமைச்சரவை முடிவு

"1971—72-ம ஆண்டிலிருந்து 8.33 சதவிகித குறைந்தபட்ச போனசு ரொக்கமாக அளிககப்பட வேண்டும்" என்று மத்திய அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது.

ஆனால் ஏற்கனவே 8.33 சதவிகிதத்திற்கு அதிகமாகப் போனசு பெறும் ஊழியர்கள உள்ளனர்; அவர்கள சம்பந்தமாக அரசாங்கம் பினவருமாறு முடிவு செய்திருக்கிறது:—

8.33 சதவிகிதத்திற்கு அதிகமாக ஏற்கனவே போனசு பெற்று வரும் ஊழியர்களுக்கு 1970–71-ம ஆண்டில பெற்ற தொகை அவர்களுக்கு ரொக்கமாகவே தரப்படும்.

1970–71-ல் கொடுக்கப்பட்ட தொகைக்கு மேலாகக் கொடுக்கப்படும் தொகை மட்டுமே அந்த ஊழியர்கள் பிராவிடண்டு நிதிக் கணக்கில் டிபாசிட் செய்யப்படும்; அதாவது, ஒரு ஊழியர் 1970--71-ல் 12 சதவிகிதம போனசு பெற்றார் என்றும், 1971--72-ல் அவரது தொழிலதிபரின் இலாப நிலையையொட்டி 15 சதவிகிதம் போனசு பெற அவர் அருகதை பெறுகிறார் என்

(4-ம் பக்கம் பார்க்க)

# 'பெருந் தலைவர்' பிதற்றல்

[✶]

# சொன்னதை மறந்துவிட்டார்-- 'பொல்லாங்கு' கூற முனைகிறார்

[✶]

## கழக ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிக்கின்றவருக்கு நல்லவை பல நடப்பதை நினைப்பதற்கு நேரமில்லை

### கடற்கரைக் கூட்டத்தில் கழகத் தலைவர் கலைஞர் தெளிவுரை

சென்னை, செப். 18—

"'இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம்' என்கிறார் காமராசர்; கவிழ்ப்பதற்கு ஏன் முயற்சிக்க வேண்டும்--என்ன நன்மையை மக்களுக்குச் செய்யவில்லை இந்த அரசு?

"கடந்த இந்த ஒரு மாத காலத்தில் மட்டும் செயங்கொண்டசோழபுரத்தில் கொள்ளிடத்திலிருந்து குடிநீர் வழங்க ரூ. 47 இலட்சத்தில் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. புகழ் பெற்ற கல்லக்குடியில் 2000 பேருக்குக் கண் அறுவைச் சிகிச்சை முடிந்து--கண்ணாடி வழங்கப்பட்டிருக்கிறது; கும்பகோணத்தில் ஒன்றரை இலட்சம் விவசாயத் தொழிலாளருக்குக் குடியிருப்பு மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது; கோவில்பட்டியில் 11 கிராமங்கள் உட்பட குடிநீர் வசதிக்கான திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது; இவைகள் பணக்காரர்களுக்காகச் செய்யப்படுகின்ற--செய்யப்பட்ட காரியங்களா?

"பணக்காரர்களுக்கும் சில காரியங்களைச் செய்திருக்கிறோம்; அதிகப் பேருந்துகளை வைத்துக்கொண்டு அவர்கள் சிரமப்படுகிறார்கள் என்பதற்காகப் பேருந்துகளைத் தேசியமயமாக்கினோம், நிலப் பிரபுக்களுக்கு நன்மை செய்ய 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என உச்சவரம்பு கொண்டுவந்தோம்; இப்படித்தான் பணக்காரர்களுக்குக் கழகம் சலுகை அளித்து வருகிறது"

**என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெளிவுற விளக்கிக் குறிப்பிட்டார்; திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சி என்றாலும்--எதிர்க் கட்சி போன்று ஏன் நடைபோடுகிறது என்பதை விளக்கியும்--அண்ணாவின் மீது இப்போது அலாதியான ஆசை ஏற்பட்டிருப்பதைப்போல் புலம்புகிறவர்களின் உள்நோக்கங்களை அம்பலப்படுத்தியும் அவர் கூறியதாவது:—**

அண்ணாவின் கொள்கை நமக்குத் தெரியும்; எந்தெந்தத் திட்டங்களை நமக்கு அளித்தார் என்பதும் தெரியும்; அவர்கள் இந்தக் கடற்கரையின் வடகோடியையும்--தென்கோடியையும் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம்.

வடகோடியில் அண்ணனின் கல்லறை; தென்கோடியில் அவர் விரும்பிய குடிசை மாற்றுவாரியத் திட்டத்தின்படி கட்டப்பட்ட நொச்சிக்குப்பம்.

அண்ணாவின் கொள்கை, 'அடித்தளத்தில் இருக்கின்ற சாதாரண மக்கள் வாழ்வு பெற வேண்டும்--ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்பதுதான்.

ஒன்றே ஒன்று அவர்களுக்குக் கிடைத்துவிட்டது; 'அண்ணா முதலமைச்சராக இருந்தவரையில் மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிடவில்லை; கருணாநிதி வந்த பிறகு--இவர்களெல்லாம் அமைச்சர்களாக வந்த பிறகு அண்ணாவின் கொள்கையை மறந்துவிட்டார்கள்' என்கிறார்கள்.

'அது கொள்கையா?—கடைபிடிக்க வேண்டிய பழக்கமா?' என்ற வாதத்திற்கு நான் செல்ல விரும்பவில்லை; அந்தக் கடினமான வாதம் அவர்களுக்குப் புரியாது!

மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில், 'இந்தியாவெங்கும்--எல்லா மாநிலங்களிலும் அது செயல்படுத்தப்பட வேண்டும்' என்பதுதான் அண்ணாவின் கருத்தாகும்; 'நாங்கள் மதுவிலக்கை நிறைவேற்றுகிறோம்; அதனால் ஏற்படுகின்ற இழப்பிற்கு ஈட்டுத் தொகை மத்திய அரசு தரவேண்டும்' என்று அண்ணா அவர்கள் கேட்டார்; மத்திய அரசு தரவில்லை; கேட்டுக்கொண்டேயிருந்த அண்ணா மறைந்துவிட்டார்; பிறகு, நாங்கள் தொடர்ந்து கேட்டோம்--தரவில்லை; 'என்ன செய்வது?' என்று கேட்க அண்ணா இல்லை--ஆகவே நாங்கள் முடிவெடுத்தோம்.

இன்னமும் நான் கூறுவேன்--தமிழக அரசின் சார்பில்—தி. மு. கழகத்தின் சார்பில் கூறுவேன்--நாளைக்கே, 'அகில இந்திய மட்டத்தில்--இந்தியா முழுவதிலும் மதுவிலக்குச் செயல்படுத்தப்பட வேண்டும்' என்ற ஓர் அவசரப் பிரகடனத்தைக் குடியரசுத் தலைவர் வெளியிடுவாரேயானால், அதை முதலில் வரவேற்றுப் பாராட்டு அறிக்கை தருகின்ற முதல் அரசு தமிழக—தி. மு. கழக அரசாகத்தான் இருக்கும்!

இதிலே அதிகக் கவலைப்படுகிறவர் பெருந் தலைவர் காமராசர்; 'ஆகா--பார்த்தீர்களா--மதுவிலக்கைக் கைவிட்டுவிட்டார்கள்' என்கிறார்!

எந்தக் காமராசர் அப்படிக் கூறுகிறார்--தமிழகத்தில் முதலமைச்சராக இருந்தபோது, புதுவையில் நடைபெற்ற தேர்தலுக்குச் சென்ற காமராசர்--அங்கே மக்கள் கூட்டம், 'நீங்கள் வெற்றி பெற்று வந்தால் கள்ளுக்கடையை மூடிவிடுவீர்கள்; ஆகவே, உங்களுக்கு வாக்கு அளிக்கமாட்டோம்' என்று கூச்சலிட்ட நேரத்தில்--காமராசர், 'நாங்கள் வெற்றி பெற்றால் சத்தியமாகக் கள்ளுக்கடைகளை மூடமாட்டோம்--திறந்தபடியே இருக்கும்--ஆகவே வாக்கு அளியுங்கள்' என்று கேட்டது அப்போது எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாகியிருக்கிறது; அந்தக் காமராசர்தான் இன்று மதுவிலக்குக் கொள்கையை நாங்கள் கைவிட்டுவிட்டதாகப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்!

காமராசர் எந்த அளவிற்கு எங்களையெல்லாம் பற்றிப் பேசுகிறார் என்பதை நாவலர் குறிப்பிட்டார்; நான், அவர் அப்படிப் பேசுவதற்காக வருத்தப்பட்டது கிடையாது; ஏனென்றால், புத்தர் சொன்னதைப்போல்--பிச்சைக்காரர்கள் பிச்சையை ஏற்றுக்கொண்டால்தான் அது சட்டிக்குப் போகும்; ஏற்றுக்கொள்ளாவிட்டால், பிச்சைப் போட்டவர்கள் வீட்டிற்குத்தான் பிச்சை போகும்; ஆகவே, காமராசர் என்னதான் அர்ச்சித்தாலும், நான், அண்ணன் வழியில் வந்தவன்--அவர் கரம்தொட்டு வளர்ந்தவன்--வழிபட்டு வாழ்ந்தவன்--மொழி கேட்டுப் பயின்றவன்--என்ற காரணத்தால் நான் கவலைப்படவில்லை.

உயர்ந்த இடத்தில் உள்ள பெரிய தலைவராகக் காமராசரைக் கருதுகிறேன்; தமிழ்நாட்டு அரசியல் சரித்திரத்தில் அவருக்கு ஓர் இடம் உண்டு; அவருடைய கட்சிக்காரர்கள் மறுத்தாலும் நான் அதை மறுக்கமாட்டேன்; அந்த இடத்தில் எப்போதும் அவர் இருக்கவேண்டும் என்பதற்காகப் போராடக்கூடிய முதல் ஆளாக நான் இருப்பேன்.

'தமிழ்நாட்டில் ஒரு ஆளும் கட்சி--அதுவும் ஆளத் தொடங்கி நான்கைந்து ஆண்டுகளுக்குப் பிறகு--இன்னும் ஒரு மிதப்புத் தன்மையை அடையாமல் எதிர்க்கட்சி போன்று நடைபோட்டுக் கொண்டிருக்கிறதே--என்ன காரணம்' என்பதை அறிய அண்டை மாநிலத்திலும்--வட மாநிலத்திலும்--வெளிநாடுகளிலும் உள்ளவர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்--தி. மு. கழகம் தமிழ்நாட்டில் ஆளும் கட்சி என்றாலும்--'மாநில சுயாட்சி வேண்டும்' என்கின்ற அண்ணாவின் கொள்கையைப் பிரதிபலிக்கின்ற நேரத்தில்--திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாவில் இருக்கின்ற கட்சிகளில் தலைசிறந்த எதிர்க் கட்சியாகும்; ஆகவே, இது ஒரு எதிர்க் கட்சிக்கு இருக்கவேண்டிய இலக்கணம்--எழுச்சி--உணர்ச்சி அத்தனையையும் ஆளும் கட்சியாக இருக்கின்ற இப்போதும் பெற்றிருக்கிறது.

ஆளும் கட்சியென்றால்--கோரிக்கைகளைப் பரிசீலிக்கின்ற இடத்தில் இருக்கவேண்டிய கட்சியாகும்; ஆனால் இந்த ஆளும் கட்சியோ (தி. மு. கழகம்), கோரிக்கைகளை வைத்து, 'இதைத் தருகிறாயா--இல்லையா' என்று கேட்கின்ற ஆளும் கட்சியாக இருக்கிறது.

'ஆளும் கட்சி இவ்வளவு விறுவிறுப்போடு இருக்காது; நான்கைந்து ஆண்டுக் காலத்தில் ஆளும் கட்சியில் இருக்கின்ற மேலிடத்துத் தலைவர்களானாலும்--செயல் வீரர்களானாலும்--தொண்டர்களானாலும் சலித்துப் போய்விடுவார்கள்; வாழ்க்கை வசதிகளைத் தேடிக்கொள்வார்கள்; தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் நேரத்தைச் செலவழிப்பார்கள்; அதற்காகவே சிந்திப்பார்கள்--செயல்படுவார்கள்' என்றெல்லாம் சிலர் கருதிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், 1966-ம் ஆண்டு எத்தகைய இளமை முறுக்கோடு--உணர்ச்சியோடு இருந்ததோ அதைப் போலத்தான் இன்றும் இருக்கிறது என்பதற்கு சரியான எடுத்துக்காட்டுத்தான், சென்னையில் நடைபெற்ற ஊர்வலத்தின் எழிலாகும்.

## அண்ணாமீது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அக்கறைக்கு என்ன காரணமோ!

இப்போது திடீரென்று அண்ணாவின்மீது அலாதியான ஆசை சிலருக்கு ஏற்பட்டிருப்பது எனக்குத் தெரியும்--உங்களுக்கும் தெரியும்; அது அண்ணாவின் மீது ஏற்பட்ட ஆசையல்ல; 'கருணாநிதியைத் தாழ்த்துவதற்காக அண்ணாவைப் போற்றுகிறார்கள்' என்பதும் பல பேருக்குத் தெரியும்.

'நம்மைத் தாழ்த்தியாவது என் அண்ணனை உயர்த்துகிறார்களே--அதுவரையில் நாம் பயன்படுகிறோம்' என்பதில் தனி மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு பத்திரிகையில் கேலிச் சித்திரம் கூடப் போட்டிருக்கிறார்கள்; நானும்--நாவலரும், மற்ற அமைச்சர்களும் 'அண்ணா வாழ்க' என்று சொல்லிக்கொண்டு கொடி பிடித்துக்கொண்டு போகிறோம்; கையில் படத்தின் சட்டம் மாத்திரம் இருக்கிறது; அண்ணாவின் படம் கீழே விழுந்து கிடக்கிறது; 'அண்ணாவின் கொள்கை' என்று அதிலே எழுதியிருக்கிறது; அண்ணாவின் கொள்கையை நாங்கள் விட்டுவிட்டோமாம்--ஆனால், 'அண்ணா வாழ்க' என்று சொல்கிறோமாம்!

நான் வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறேன்--அண்ணாவின் கொள்கையை விட்டுவிட்டோம்; ஆனால், அண்ணாவின் முக்கியமான கொள்கை மாநில சுயாட்சி--அதை நாங்கள் விட்டுவிட்டோமென்றால் அவர்களாவது அதை எடுத்துக் கொள்ளட்டுமே--அவர்கள் பின்னால் செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்; அதற்கு அவர்களுக்கு வக்கு இருக்கிறதா--வகை இருக்கிறதா--தெம்பு இருக்கிறதா--திராணி இருக்கிறதா--அந்த இலட்சியத்தில் நம்பிக்கை இருக்கிறதா--என்றால், இல்லை; ஆனால், 'அண்ணாவின் கொள்கையை விட்டுவிட்டார்கள்' என்று மட்டும் கதைக்கிறார்கள்!

'அண்ணா என்ன கொள்கையைச் சொன்னார்' என்று திருப்பிக் கேட்டால், 'அதுபற்றித் தலைமைக் கழகத்தில் புத்தகம் இருக்கிறதா--கொடுங்கள்' என்று கேட்கக்கூடியவர்கள்தான் அண்ணாவின் கொள்கையை நமக்கு நினைவுபடுத்துகிறார்கள்!"

---

# புதுடில்லியில் தொழில் அமைச்சர்கள் மாநாடு

### அமைச்சர் செ. மாதவன் கலந்துகொள்கிறார்

புதுடில்லி, செப். 18—

புதுடில்லியில் நடைபெறும் தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகத் தமிழ்நாடு தொழில் அமைச்சர் செ. மாதவன் டெல்லிக்குச் செல்கிறார்; இது பற்றிய விவரங்களை, நிருபர்களிடம் அவர் வெளியிட்டார்; அவர் கூறியதாவது:—

"தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இன்று டில்லிக்குச் செல்கிறேன்; அங்கு சிறு தொழில் வாரியக் கூட்டத்திலும் கலந்துகொள்வேன்.

### அரியானா -- பஞ்சாப் பயணம்

அங்கிருந்து அரியானா, பஞ்சாப் மாநிலங்களுக்குச் சென்று சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறேன்; அந்த மாநிலங்களில் மட்டும் எப்படிச் சிறு தொழில்கள் அதிகமாக இருக்கின்றன--அரசாங்கம் என்னென்ன உதவிகளைச் செய்கின்றன--சட்ட விதிகள் எப்படி எளிதாக்கப்பட்டுள்ளன என்பதைப் பற்றி அறிய இருக்கிறேன்; 27-ந் தேதி சென்னை திரும்புகிறேன்.

### சேலம் உருக்காலை நிர்வாகம்

சேலம் உருக்காலை நிர்வாகத்தை இந்துஸ்தான் இரும்பு நிறுவனத்திடம் விடாமல்--அதற்கென்று தனி நிறுவனம் அமைக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தி வந்தோம்; அதன்படி, இதற்காக தனி நிறுவனத்தை மத்திய அரசு ஏற்படுத்தியதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது அந்த நிறுவனத்துக்கு வி. சுப்பிரமணியம் என்ற நிபுணரைத் தலைவராக நியமித்திருக்கின்றனர்; இவர் ஏற்கனவே இரும்புத் தொழிற்சாலையில் பணியாற்றியவர்.

### கோரிக்கை பற்றிய நிலை

இரண்டாவது கோரிக்கையாக, 'சேலம் இரும்பு நிறுவனத்தின் நிர்வாகக் குழுவில், தமிழக அரசுக்கும் பங்கு இருக்க வேண்டும்' என்று கேட்டிருந்தோம்; 'அப்படிச் செய்வதன் மூலம் நிர்வாகத்தை இன்னும் சிறப்பாகவும்--திறமையாகவும் செய்ய இயலும்' என்று தெரிவித்திருந்தோம்; அதுபற்றிய முடிவு இன்னும் வரவில்லை."

# தமிழ் நாட்டில் 6,500 பஸ்களும் தேசியமயமாகும்

### அமைச்சர் இராமச்சந்திரன் கருத்து விளக்கம்

திருவனந்தபுரம், செப். 18—

"தமிழ்நாட்டில் பஸ் போக்குவரத்து முழுவதும் விரைவில் தேசியமயமாக்கப்படும்.

என்று, போக்குவரத்து அமைச்சர் இராமச்சந்திரன் இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

தமிழ்நாட்டில் சுமார் இப்போது 6,500 பஸ்கள் ஓடுகின்றன; இதில் இப்போது 30 சதவிகிதம் தான் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன.

### பஸ் தொழிலாளருக்கு சதவிகிதம் பங்குகள்

பஸ் தொழிலாளருக்கு முதலில் 24 சதவிகிதம் பங்குகள் கொடுக்கப்படும்; பஸ்களை இயக்குவதில் தொழிலாளர்கள் நேரடிப் பொறுப்பு கொள்வதற்கு இது உதவியாக இருக்கும்.

### மதுரை--திருவனந்தபுரம் பஸ் போக்குவரத்து

இன்னும் ஒரு மாதத்துக்குள் தமிழ்நாடு அரசு, மதுரை—திருவனந்தபுரத்திற்கிடையே பஸ் போக்குவரத்துத் தொடங்கும்.

### சாலைப் போக்குவரத்துக்கு விரிவான ஒப்பந்தம்

கேரளம்--தமிழ்நாடுகளுக்கிடையே சாலைப் போக்குவரத்துப் பிரச்னைகள் சம்பந்தமாகக் கேரள அரசுடன் விரைவில் ஒரு விரிவான ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும்.

மைசூர்--ஆந்திரா ஆகிய இரு அண்டை மாநிலகளுடன் ஏற்கனவே தமிழ்நாடு அரசு ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருக்கிறது."

# லாரி ஓட்டுவோர் பற்றி அமைச்சர்

திருச்சி, செப். 19—

"குடிபோதையில் லாரிகள் ஓட்டும் டிரைவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்; அவர்களுடைய லைசென்சுகளை உடனடியாக ரத்து செய்யப்படும்"

என்று, போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் கூறினார்; இதன் தொடர்பாகச் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:—

"மதுபானம் சாப்பிட்டுவிட்டு டிரைவர்கள் லாரிகளை ஓட்டும்போது விபத்துக்கள் ஏற்படுகின்றன; எல்லா நெடுஞ்சாலைகளிலும் போக்குவரத்து அதிகாரிகள் அடிக்கடி திடீர் சோதனைகள் நடத்துவார்கள்; குடிபோதையில் லாரி டிரைவர்கள் இருப்பதாகத் தெரிய வந்தால், அவர்களுடைய வண்டியோட்டும் லைசென்சுகள் உடனடியாகப் பறிமுதல் செய்யப்படும்."

# எண்ணெய் வித்துக்களின் விளைச்சல் குறைந்தது

### 4 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சூரியகாந்தி பயிரிடத் திட்டம்

புதுடில்லி, செப். 19—

இந்தியா முழுவதிலும் இந்த ஆண்டில் 4 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சூரியகாந்தி பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் வேளாண்மை ஆராய்ச்சி கழகம் இதுபற்றி அறிக்கை ஒன்று தயாரித்திருக்கிறது; அதில் கூறப்பட்டிருப்பதாவது:—

"இந்தியாவில் எண்ணெய்வித்துக்களின் விளைச்சல் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை; கடந்த ஆண்டு 105 கோடி டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் 95 இலட்சம் டன்தான் விளைந்தது; இதனால் 10 இலட்சம் டன் குறைபாடு ஏற்பட்டுள்ளது.

சரியான பொருக்கு விதைகளையும்- வீரிய விதைகளையும் பயன்படுத்தாததால்தான் உற்பத்தி அதிகமாகக் குறைந்தது.

எண்ணெ வித்து வகைகளில் அதிகமாகப் பயிரிடப்படுவது நிலக்கடலைதான்; ஆனால், நிலக்கடலையைவிட அதிக எண்ணெய்ச் சத்து உள்ளது சூரியகாந்தி விதையாகும்.

நிலக்கடலையைவிடச் சூரியகாந்தி விதையில் 66 சதவிகிதம் எண்ணெய்ச் சத்து அதிகமாக இருக்கிறது.

ஆகவே, இந்த ஆண்டில் 4 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சூரியகாந்தி பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இது மேலும் அதிகரிக்கப்பட்டு 1978-ம் ஆண்டுக்குள் 20 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சூரியகாந்தி பயிரிடப்படும்."

# திருப்பதிக் கோயில் வருமானம்

### கணக்கெடுக்க முடியாத நிலைமையாம்

திருப்பதி, செப். 18—

திருப்பதிக்கோயிலுக்கு ஆகஸ்டு மாதத்தில் உண்டியிலிருந்து ரூ. 21,33,399.90-ம், தரிசன டிக்கெட் கட்டணத்தின்மூலம் ரூ. 5,35,443-ம், லட்டு--வடை விற்பனையின் மூலம் ரூ. 4,73,700-ம் வருமானம் வந்துள்ளதாம்.

கோயிலின் இதர வருமானங்கள் இன்னமும் கணக்கெடுக்க முடியவில்லையாம்.

# தந்தை பெரியாருக்குப் பிறந்த நாள் பரிசுகள்

## வெள்ளி வீர வாள் அன்பளிப்பு

### சமூக சீர்திருத்தப் பணிகட்குப் பாராட்டு

திருச்சி, செப். 18—

திருச்சி சிந்தனையாளர் கழகத்தின் சார்பில் தேவா மன்றத்தில் நடைபெற்ற தந்தை பெரியார் அவர்களின் 94-வது பிறந்த நாள் விழாவின்போது, அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், வேலைப்பாடுகள் அமைந்த வெள்ளி வீர வாள் ஒன்றை--பிறந்த நாள் பரிசாக--பெரியார் அவர்களிடம் அளித்தார்.

இலங்கையிலுள்ள ஈ.வெ.ரா. உயர்நிலைப் பள்ளியின் சார்பில் அன்பளிப்பாக அனுப்பப்பட்ட வெள்ளித் தட்டை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் வழங்கினார்.

தந்தை பெரியார் அவர்களின் அமைதிமிக்க 'சீர்திருத்தப் புரட்சி'ப் பணிகளைப் பாராட்டி அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம்-- எஸ் இராமச்சந்திரன் மற்றும் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு, என். கோதண்டபாணி, கோரா, கி. வீரமணி, எம். கே. டி. சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

விழாவுக்கு தி ந. கே. எம். சுப்பிரமணியம் தலைமைதாங்கினர்.

திரு. கே. கோவிந்தராசுலு அனைவரையும் வரவேற்றார்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து தந்தை பெரியார் அவர்கள் பேசினார்.

### அமைச்சர் ப. உ. சண்முகம் -- மேயர் எஸ். முத்து வாழ்த்து

வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம்--மதுரை மேயர் எஸ் முத்து எம்.எல்.சி. ஆகியோர், தந்தை பெரியார் அவர்களுக்கு மலர் மாலைகள் அணிவித்துப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினர்.

திருச்சி-1 சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினர்.

# செங்கற்பட்டு மாவட்டத்தில் நிலவரி பாக்கி வசூல் தள்ளிவைப்பு

திருவள்ளூர், செப் 19—

"செங்கற்பட்டு மாவட்டத்தில் நிலவரி பாக்கி--கடன் தவணைகள் இதர பாக்கிகள் வசூலை ஒத்திவைக்கும்படி எல்லாத் தாசில்தார்களுக்கும் ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது; இந்த உத்தரவு செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும் பொருந்தும்"

என்று செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் என். கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"அந்தப் பகுதிகளில் வறட்சி நிலைமை பற்றியும் பயிர்கள் நிலைமை பற்றியும் வாராவாரம் எனக்கு அறிக்கை அனுப்புமாறு தாசில்தார்களுக்கு உத்தரவிட்டிருக்கிறேன்.

மாவட்டம் முழுவதிலும் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த மேற்கொண்டு நிதி அளிக்கும்படி அரசிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

திருவள்ளூர், திருத்தணி, திருப்பெரும்புதூர் ஆகிய இடங்களில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த அரசு ரூ 1.50 இலட்சம் அனுமதித்திருக்கிறது; கிணறுகளை ஆழப்படுத்தும் வேலை நடந்து வருகிறது."

# விவசாய வருமானம் அதிகரித்திருக்கிறதாம்

புதுடில்லி, செப். 19—

"1960—61 லிருந்து 1970—71 வரையிலுமான 10 ஆண்டுகளில் இந்தியாவின் விவசாய வருமானம் 142.6 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது"

என்று பொருளாதார--விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனம் கூறியிருக்கிறது.

1960—61-ல் விவசாய வருமானம் ரூ 5,892 கோடியாகும்; 1970—71-ல் அது ரூ. 14,197 கோடியாகும்.

இந்த 10 ஆண்டுக்கால தேசிய வருமானம் ரூ. 137.5 சதவிகிதமாகும்.

# கண்டரக்கோட்டை உயர்நிலைப் பள்ளி

### அமைச்சர் சத்தியவாணிமுத்து திறந்துவைத்தார்

கடலூர், செப். 18—

தென்னாற்காடு மாவட்டம் நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டரக்கோட்டையில் புதிதாக உயர் தொடக்கப் பள்ளிக்கூடம் கட்டப்பட்டிருக்கிறது.

ரூ. 20,000 செலவில் கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டடத்திற்கும் பரிசுச் சீட்டு வருமானத்திலிருந்து ரூ. 13,000 மானியம் வழங்கப்பட்டது.

இந்தக் கட்டடத் திறப்பு விழா நெல்லிக்குப்பம் ஒன்றியத் தலைவர் வி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடந்தது.

அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

சட்டமன்ற உறுப்பினர் இராசாங்கம், பண்ருட்டி நகராட்சித் தலைவர் ஏ. மணி, நகராட்சி உறுப்பினர் ஆர்.எஸ். மணி, கடலூர் வட்டச் செயலாளர் ஏ.வி. தண்டபாணி ஆகியோர் பேசினர்.

### தண்ணீர்த்தொட்டி திறப்பு

விழுப்புரம், செப். 18—

விழுப்புரத்திற்கு அருகிலுள்ள நல்லப்பரெட்டிபாளையம் கிராமத்தில் புதிதாக மேல் நிலை குடிதண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது.

ரூ. 42,000 செலவில் அரிசன நலத் துறையினர் இந்தத் தண்ணீர்த் தொட்டியை அமைத்துள்ளனர்.

சட்டமன்ற உறுப்பினர் எம். இராமன் தலைமையில் இந்தத் தண்ணீர்த் தொட்டித் திறப்பு விழா நடந்தது.

அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் இந்தத் தண்ணீர்த் தொட்டியைத் திறந்துவைத்தார்.

# உயர்நிலைப் பள்ளிக்கு வ. உ. சி. பெயர்

புதுவை, செப். 18—

பாண்டிச்சேரியில் 85 ஆண்டுக் காலமாக இயங்கிவரும் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளையின் நினைவாக 'வ.உ.சி. அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

அந்தப் பள்ளியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில், பள்ளியின் புதிய பெயர்ப் பலகையைப் புதுவை கல்வி அமைச்சர் எஸ். ஆறுமுகம் திறந்துவைத்தார்.

இப் பள்ளியில் 'திருவள்ளுவர் மாணவர் இலக்கிய மன்ற'த்தை வ.உ. சிதம்பரம் பிள்ளையின் மகன் வ.உ.சி. சுப்பிரமணியம் துவக்கி வைத்தார். மாணவர்கள் அடிக்கடி தங்களிடையே பல பேச்சுப் போட்டிகள் நடத்தி, தங்கள் சிந்தனைத் திறனையும், பேச்சாற்றலையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்; இப்பள்ளியில் தமிழிலும்--ஆங்கிலத்திலும் முதன்மையாக விளங்கும் மாணவர்களுக்குப் பரிசளிப்பதற்காகத் தாம் ரூ. 101 தருவதாக அறிவித்தார்.

# சென்னையில் நடைபெற்ற ஊர்வலம்- அலங்கார வண்டிகள் விவரம்

சென்னை, செப். 18-

பேரறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாளையொட்டி சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் நடைபெற்ற ஊர்வலத்தில் இடம் பெற்ற 64 அலங்கார வண்டிகளின் விவரம் வருமாறு :-

1. நாதசுரம்
2. நெசவாளர் துயர் துடைக்க அண்ணா துணி விற்றல்
3. புயல் நிவாரண நிதி திரட்டினார் அண்ணா
4. நீதிதேவன் மயக்கத்தில் இராவணனாக அண்ணா
5. புத்தர் வழியில் அண்ணா
6. ஏசு வழியில் அண்ணா
7. வள்ளுவர் வழியில் அண்ணா
8. காந்தி வழியில் அண்ணா
9. அன்பகம் கண்டார் அண்ணா
10. பொய்க்கால் குதிரை
11. தி.மு.க. தியாக மறவர் கோட்டம் (தீக்குளிப்பு)
12. புத்தருக்குப் பின் சீர்திருத்தவாதி
13. அண்ணா அமைச்சரவை பதவி உறுதிமொழி (மக்கள் சந்திப்பு)
14. கோட்டையில் அண்ணா நுழைவு
15. சீரணி கண்டார் அண்ணா
16. சுயமரியாதைத் திருமணச் சட்டம்
17. கல்யாணபுரம் கால்வாய்
18. உலகத் தமிழ் மாநாடு
19. போலீசு கரக ஆட்டம்
20. நஞ்சைப் புஞ்சைக்கு வரி விலக்கு
21. இரு மொழித் திட்டம் (பாளையங்கோட்டைச் சிறை)
22. இந்தி அரக்கி விரட்டப்படல்
23. அண்ணா அமெரிக்கப் பயணம்
24. யேல் பல்கலைக் கழகத்தில் அண்ணா
25. சென்னைக்குத் தமிழ்நாடு பெயர் (சங்கரலிங்கனார்)
26. பசுமைப் புரட்சி
27. உலகத் தலைவர் அண்ணா
28. தோடர்கள் நாட்டியம்
29. இலவசக் கல்வி
30. முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு அரசு உதவி
31. சலவைத் தொழிலாளர்கட்கு அரசு உதவி
32. குடிசைகள் மாற்றியமைக்கப்படுகின்றன
33. மனு நீதி நாள்
34. காவல் துறையினருக்குப் பதக்கம் அளித்தல்
35. வீட்டுமனைப் பட்டா வழங்கல்
36. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு பதக்கம் வழங்கல்
37. கும்மியடிக்கும் பெண்கள்
38. அணைக்கட்டுகள் காட்சி
39. தஞ்சை ஊரணி -- கால்வாய் -- குளம் ஆழப்படுத்துதல்
40. தில்லையாடி வள்ளியம்மை நகர்
41. கூவம் சீரமைப்பு
42. காவிரி நீர்
43. குடிநீர் வாரியப் பணி
44. மே நாள் அன்றும் -- இன்றும்
45. எங்கும் மின்வசதி
46. இராஜஸ்தான் நடனம்
47. சத்துணவுத் திட்டம்
48. வேலைவாய்ப்புக்கு இளைஞர் அணி
49. ஆலய நிதியைச் சமுதாய நலன்களுக்குப் பயன்படுத்துதல்
50. நவீனப் படகு
51. சுற்றுலா வளர்ச்சி சுழலும் மாடி
52. தமிழில் இறை வழிபாடு
53. நன்மைகள் ஆயிரம் (என்.ஜி.ஓ.க்களும் மற்றவர்களும்)
54. பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதி
55. சீரணி அரங்கத் திறப்பு விழா (இசை)
56. கண்ணொளி வழங்கும் திட்டம்
57. கிராமங்களில் இணைப்புச் சாலை
58. எல்லோருக்கும் ஒரே நீதி—விதிவிலக்கு ரத்து
59. நிலப்பட்டா வழங்கல்
60. ஜெமினி மேம்பாலம்
61. மாநில சுயாட்சி உயில்
62. பேருந்துகள் நாட்டுடைமையாதல்
63. போலீசு பாண்டு
64. மயிலாசனத்தில் தலைவர்கள்

---

விருத்தாசலம் பகுதியில்

# 10,000 ஏக்கர் நிலத்தில் சூரிய காந்தி பயிரிடப்படும்

விருத்தாசலம், செப். 18—

தென்னாற்காடு மாவட்டம்—மா. குன்னத்தூரில் விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது; ஏறத்தாழ 125 விவசாயிகள் கலந்துகொண்டனர்; அவர்களுக்கு இலவசமாகச் சூரியகாந்தி விதை வழங்கப்பட்டது.

விருத்தாசலம் மணிலா ஏற்றுமதிச் சார்புத் திட்ட வேளாண்மை அதிகாரி கோபாலகிருஷ்ணன், சூரிய காந்திச் செடியைப் பயிரிடும் வழிமுறைகளை விளக்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் மற்றும் உளுந்தூர்ப்பேட்டை வட்டாரத்தில் இவ்வாண்டில் 10,000 ஏக்கர் நிலத்தில் சூரியகாந்திச் செடிகளைப் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது."

# சேலத்தில் சிறிய கார் தொழிற்சாலை

### அமைச்சர் மாதவன் தகவல்

### சிறு கருவிகள் தொழிற்சாலை தொடங்க ஆராய்ச்சி

சேலம், செப் 19—

"சேலத்தில் சிறிய கார் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்கு மத்திய அரசு டெல்லி அனுமதி வழங்கியிருக்கிறது"

என்று, தொழில் அமைச்சர் செ. மாதவன் கூறினார்.

சேலத்தில் இதுபற்றி செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:—

"சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் பற்றி மத்திய அரசையும்--இரும்புத் தொழில் சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களையும் கலந்தாலோசித்து--சேலத்தில் என்னென்ன சிறு கருவிகள் செய்யும் தொழிற்சாலைகள் தொடங்கலாம் என்பது பற்றி ஆராயப்படும்; இதற்காகச் சேலத்தில் கருத்தரங்கு நடைபெறும்.

சேலத்தில் சிறிய கார் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கப்படுகிறது; இதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கிவிட்டது; இதற்கு தேவையான உதவிகளை மாநில அரசு செய்யும்.

### சிகரெட்டுத் தொழிற்சாலை

தர்மபுரி மாவட்டத்தில் விரைவில் சிகரெட்டுத் தொழிற்சாலை அமைக்கப்படும்; இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன"

கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நா. சண்முகசிகாமணி தலைமைவகித்தார்.

# விருந்தினர் எண்ணிக்கை கட்டுப்பாடு

### உத்தரவுகளைத் திருத்துமாறு மாநிலங்களுக்கு வற்புறுத்தல்

புதுடில்லி, செப். 19—

திருமணங்கள் போன்ற நிகழ்ச்சிகளில் விருந்தினர்களின் எண்ணிக்கை 100-க்குக் குறைவாக இருக்கவேண்டும்; மற்ற நிகழ்ச்சிகளில் விருந்தினர்களின் எண்ணிக்கை 25-க்கு மேல் போகக்கூடாது.

இவ்வாறு கட்டுப்படுத்த விருந்து கட்டுப்பாடு உத்தரவுகளைத் திருத்துமாறு மத்திய உணவுத் துறை செயலாளர், எல்லா மாநில அரசுகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

# மாநில சுயாட்சிக் கோரிக்கை

## அடுத்த நடவடிக்கை என்ன?

### மத்திய அரசின் கடமையை வலியுறுத்திக் கலைஞர் விளக்கம்

சென்னை, செப். 19—

"மாநில சுயாட்சிக் கோரிக்கை குறித்து, 'இத்தனை நாட்களுக்குள் மாநில முதலமைச்சர்களுடன் பேச வேண்டும்' என்று வரையறுக்கப்பட்ட காலக்கெடு எதனையும் நான் குறிப்பிடவில்லை; சென்ற ஆண்டில் இந்தக் கோரிக்கைக்குப் பதிலளித்துத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி, எனக்கு எழுதிய கடிதத்தில், 'இராசமன்னார் குழு அறிக்கையும் -- நிர்வாகச் சீர்திருத்தக் குழு அறிக்கையும் கிடைத்திருக்கிறது; எல்லாப் பிரச்சினைகளையும் முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து பேசலாம்' என்று எழுதியிருந்தார்; அதை நினைவுபடுத்தித்தான் -- கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் -- 'தேதி குறிப்பது சாலச் சிறந்தது' என்று கூறியிருந்தேன்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியில் தெளிவுற விளக்கிக் கூறினர்; இதன் தொடர்பாகச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"கடற்கரைக் கூட்டத்தில் பேசியதற்கொப்ப -- மாநில சுயாட்சி பற்றி விவாதிக்கத் தேதிகுறிப்பிடும்படி கேட்டுத் தலைமை அமைச்சருக்கு எழுதுவீர்களா?"

முதல்வர்:—"மாநில சுயாட்சிக்காக இங்கிருந்து கடிதம் எழுதி-- உடனடியாக அங்கிருந்து பதில் எதிர்பார்த்து முடிவடைந்து விடுகின்ற பிரச்சினை அல்ல இது!"

கேள்வி:—"இத்தனை நாட்களுக்குள் என்று காலக்கெடு குறிப்பிடப்படுமா?"

முதல்வர்:—"இத்தனை நாட்களுக்குள் பேசி முடிவு செய்ய வேண்டுமென்று வரையறுக்கப்பட்ட காலம் எதுவும் குறிப்பிடவில்லை."

கேள்வி:—"முதலமைச்சர்களின் கருத்தை அறியும்படி தலைமை அமைச்சருக்கு யோசனை மாதிரி சொல்வீர்களா?"

முதல்வர்:—"அவர்களே சென்ற ஆண்டு இதுபற்றிக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்; இராசமன்னார் குழுவின் அறிக்கையை அனுப்பியபோது அவர்கள், 'ஏற்கனவே நிர்வாகச் சீர்திருத்தக் குழு அறிக்கை இருக்கிறது; எல்லாப் பிரச்சினைகளையும் முதலமைச்சர்கள், மாநாட்டில் கலந்து பேசலாம்' என்று தலைமை அமைச்சரே எழுதியிருக்கிறார்."

கேள்வி:—"மறந்துபோன அதை அவர்களுக்கு மீண்டும் நினைவு படுத்துவீர்களா?"

முதல்வர்:—"அதை நினைவுபடுத்தத்தான் கடற்கரை கூட்டத்தில் பேசினேன்."

கேள்வி:—"முதலமைச்சர்கள் மாநாட்டை இதற்காகக் கூட்ட வேண்டுமென்று கேட்கப் போகிறீர்களா?"

முதல்வர்:—"இதற்காகத் தனியாகக் கூட்டவேண்டுமென்று நான் சொல்லவில்லை."

கேள்வி:—"அடுத்த முதலமைச்சர்கள் மாநாட்டுப் பட்டியலில், மாநில சுயாட்சியையும் சேர்க்க வேண்டுமென்று நீங்கள் எழுதுவீர்களா?"

முதல்வர்:—"முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசுவதற்கான பட்டியலை அவர்கள்தான் தயார் செய்கிறார்கள்: தனித்தனியாக முதலமைச்சர்கள் அனுப்ப முடியுமா? அதற்கு விதி முறைகள் இருக்கிறதா என்பது பற்றி யோசிக்க வேண்டும்."

கேள்வி:—"இராசமன்னார் குழு அறிக்கைமீது கட்சியின் சார்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை பற்றி விவாதிக்கப்படுமா?"

முதல்வர்:—"கழகத்தின் அடுத்து வரும் செயற்குழு அந்த அறிக்கையை விவாதிக்கும்."

கேள்வி:—"செயற்குழு எப்போது -- எங்கு நடைபெறும்?"

முதல்வர்:—"பொதுச்செயலாளர் சுற்றுப்பயணம் முடிந்து வந்தவுடன் தேதி முடிவு செய்யப்படும்; 'கோவையில் நடைபெறும்' என்றுதான் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது; ஆகவே, அங்குதான் இருக்கக்கூடும்."

கேள்வி:—"மாநில சுயாட்சி பெற இதே வேகத்தில் சென்றால், நூறாண்டு ஆகும்போல் இருக்கிறதே!"

முதல்வர்:—"வேறு எந்த வேகத்தில் போக வேண்டுமென்று விரும்புகிறீர்கள்? முதலமைச்சர்களுடைய மாநாட்டுப் பட்டியலில் இதைச் சேர்த்துவிடுவதாலேயே பரிகாரம் கிடைத்துவிடும் என்று சொல்ல முடியாது; 'மாநில சுயாட்சிக்கு இன்னின்ன நியாயங்கள் இருக்கின்றன' என்று நாம் சொல்கிறோம், 'அதில் இன்னின்ன சங்கடங்கள் இருக்கின்றன' என்று மத்திய அரசு கருதுகிறது; ஆகவே, அவர்களே இதைத் தீர யோசித்து ஒரு முடிவுக்கு வர வேண்டிய மன நிலையைப் பெற வேண்டும்."

#### ஐதராபாத் பயணம்

கேள்வி:—"ஐதராபாத் செல்கிறீர்களா?"

முதல்வர்:—"20-ந்தேதி ஐதராபாத்தில் ஒரு கலனூர்த திறப்பு விழாவுக்கு நானும் -- கல்வியமைச்சரும் செல்கிறோம்."

#### தீவுத் திடல் பற்றிப் பேச்சு

கேள்வி:—"தீவுத் திடலுக்கான மாற்று இடம் தருவது பற்றி இராணுவ அதிகாரியுடன் பேசினீர்களா?"

பதில்:—"ஆம்; அதுபற்றி இன்று பேசியிருக்கிறோம். மேற்கொண்டு இதுபற்றி விவரங்கள் எதுவும் இப்போது சொல்வதற்கில்லை."

#### வருவாய்த்துறை ஊழியர்கட்கு யோசனை

கேள்வி:—"வருவாய்த்துறை கோரிக்கை பற்றி..."

முதல்வர்:—"அவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்றான பதவி உயர்வுக் கோரிக்கையை ஒப்புக்கொண்டு சட்டப்பேரவையில் அறிவித்து விட்டேன்; அதைத் தவிர மீதி இரண்டு கோரிக்கைகள் வைத்துள்ளனர்; அதுபற்றி அவர்கள் வருவாய்த்துறை அமைச்சரைச் சந்தித்துப் பேசி முடிவெடுக்கலாம்; அதற்குள் அவசரப்பட்டு வேறு எந்த நடவடிக்கைகளும் அவர்கள் எடுக்கத்தேவையில்லை."

#### கிறித்துவர் மாநாட்டில் நடைபெற்ற குழப்பம்

கேள்வி:—"கிறித்துவர்கள் மாநாட்டில் நடந்த குழப்பம் பற்றி........"

முதல்வர்:—"அதில் அரசியல் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை; அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் அரசியல் இருக்கக் கூடாது என்பதும் என்னுடைய கருத்து; கிறித்துவர்கள் எல்லாக் கட்சியிலும் இருக்கிறார்கள்; அங்கே நடைபெற்றது கிறித்துவர்கள் மாநாடு; அதற்குள் அவர்களுடைய கருத்து வேறுபாடுகளை பரிமாறிக் கொண்டிருக்கலாம்."

கேள்வி:—"போலீசுப் பாது காப்பு தரப்படவில்லை என்று கூறுகிறார்களே!"

முதல்வர்:—"கிறித்துவர்கள் மாநாடு உள்ளே நடக்கிறது; அதற்குள் போலீசு எப்படிப் போக முடியும்? தகராறு எழுந்தவுடன் போலீசார் சென்றிருக்கிறார்கள்."

#### எல்லாம் உணர்ந்த பக்தவத்சலம் இதனை உணருவது அவசியம்

கேள்வி:—"கூட்டுறவு இயக்கம் பற்றி பக்தவத்சலம் குறிப்பிட்டு, பினாமி கடன் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் -- தவறு நடந்திருப்பதாகவும் கூறியிருக்கிறாரே!"

முதல்வர்:—"கூட்டுறவு இயக்கத்தில் தவறு என்ன நடந்தாலும், தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கிறோம்; தவறுகளில் ஈடுபடுகிறவர்கள் ஒருவேளை அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் -- அதிலும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்றால் தயவுதாட்சண்யமில்லாமல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது; வேறு கட்சிக்காரர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் சற்று தாமதம் ஏற்பட்டாலும், ஆளும் கட்சிக்காரர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் தீவிரமாக இருக்கிறோம் என்பதை எல்லாம் உணர்ந்த பக்தவத்சலம் உணருவார் என்றே நம்புகிறேன்."

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

#### என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

செப். 20 காலை 9 மணி; பருத்திப் பள்ளி—அறிஞர் அண்ணா மன்றக் கட்டடத் திறப்பு; 10 மணி: திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 11 மணி; படலூர் ஊராட்சி வரவேற்பும் -- குடிநீர்த் தொட்டித் திறப்பும்; மாலை 4 மணி: திருச்செங்கோடு நகராட்சி வரவேற்பு; 5 மணி: பள்ளிபாளையம்—அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா; 6 மணி: குமாரபாளையம்—துணை ஆவணப் பதிவு அலுவலகத் திறப்பு; இரவு 7 மணி: குமாரபாளையம் — அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவும் பொதுமக்கள் வரவேற்பும்.

வருவாய்த் துறை அமைச்சர்

#### ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

செப். 20 மதியம் 12 மணி: குன்னூர்—நகராட்சி வரவேற்பு; பிற்பகல் 1 மணி: தமிழ்நாடு காபி—தேயிலை உற்பத்தியாளர் சங்க விருந்து; 3 மணி: டாக்டர் கலைஞர் கருணாநிதி கண் முகாமில் கலந்து கொள்ளல்; மாலை 5 மணி: பந்தலூர்—பட்டா வழங்கல்.

செப். 21 பிற்பகல் 3 மணி: குன்னூர் — பொதுமக்கள் வரவேற்பு; மாலை 5 மணி: கோடம் புத்தூர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]

## சுசீந்திரம் தி. மு. க. கிளை -- தலைமைக் கழக அறிவிப்பு

குமரி மாவட்டம் சுசீந்திரம் தி. மு. க. கிளை 18-8-72 முதல் கலைக்கப்பட்டதாகவும் — அதன் செயலாளர் திரு. வே. பாலசுப்பிரமணியம் காலவரையறையின்றி கழகத்திலிருந்து நீக்கப்பட்டதாகவும் குமரி மாவட்டச் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது, தலைமைக் கழகத்தின் இறுதி ஒப்புதலைப் பெறுமுன்னரே — இதழ்களில் -- மாவட்டச் செயலாளர் பேரில் வெளியிடப்பட்டுள்ளதும் தலைமைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்துடன், கிளைக் கழகத்தைக் கலைத்ததும் -- தன்னைக் கழகத்திலிருந்து காலவரையறையின்றி விலக்கி வைத்து அறிவிப்பு கொடுத்திருப்பதும் முறையற்றது என்றும், மாவட்டச் செயலாளரின் இந்த அறிவிப்பைப் பரிசீலனை செய்து நீதி வழங்க வேண்டும் என்றும், அதுவரை தன் பேரிலும் -- சுசீந்திரம் கிளையின் பேரிலும் எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கையை நிறுத்திவைக்குமாறும் சுசீந்திரம் கிளையின் செயலாளர், தலைமைக் கழகத்திற்கு முறையிட்டுக் கொண்டுள்ளார்.

சுசீந்திரம் கிளைச் செயலாளரின் முறையீட்டுக்கேற்பவும், இது சம்பந்தமாக குமரி மாவட்டச் செயலாளர் முறைப்படி தலைமைக் கழகத்திற்குப் பரிந்துரை செய்து இறுதி முடிவை கண்ட பிறகே -- அதற்கேற்ப -- இதழ்களில் அறிவிக்க வேண்டும் என்ற நடைமுறைக்கு ஏற்பவும் சுசீந்திரம் கிளை மற்றும் அதன் செயலாளர் பேரில் மாவட்டச் செயலாளர் எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கையைத் தலைமைக் கழகம் முறைப்படி பரிசீலனை செய்து முடிவு காணும்வரை நிறுத்திவைக்கிறது.

'அறிவகம்', சென்னை-13
14—9—1972

என். வி. நடராசன்,
துணைப் பொதுச் செயலாளர் தி. மு. க.

நடக்க இருப்பவை

## அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

### 21--9--72

**மாயூரம்**

நகர தி.மு.க. சார்பில் இரவு 7-30 மணிக்கு நகரம் பூங்காவில் -- மாணவர் சாரங்கபாணி அரங்கில்; தலைவர்: ஜெமினி இரா. நாராயணசாமி; பேசுவோர்: கேரளசுந்தரம் எம்.சி., சி.பி. கனகசபை எம்.சி., எஸ்.எஸ். பாட்சா, வி.எஸ். வாசன், கலி பூங்குன்றன், ஜி. இராமச்சந்திரன், பால் எஸ். கணேசன், வி. இராமமூர்த்தி, ஆர். கிருஷ்ணன் அ. செங்குட்டுவன். மாலை 6 மணிக்கு சா. மீனாட்சிசுந்தரம் தலைமையில் கலியமூர்த்தி இராஜா குழுவினர் நாயன இசை.)

**சேலம்-2**

அண்ணா பிறந்த நாள் விழாக் குழு சார்பில் மாலை 6 மணிக்கு செவ்வாய்ப்பேட்டை லாரி நிலையத் திடலில்; வரவேற்புரை: க. லோகநாதன்; தலைவர்: எம். இராசலிங்கம்; பேசுவோர்: கி. வீரமணி, ஈ.ஆர். கிருஷ்ணன் எம்.பி., கே. செயராமன் எம்.எல்.ஏ., எஸ். ஆறுமுகம் எம்.எல்.ஏ., எஸ்.ஏ. அன்புக்கரசு க.அ. பழனி, பொ. கோவிந்தசாமி எம்.சி., ஜி. செல்வராசு எம்.சி., ஆ. சின்னையன், கு.சீ. வெங்கடாசலம், பி. தண்டபாணி, டி.பி. மார்க்கண்டன் மற்றும் பலர். (இரவு 10 மணிக்கு ஏ. திருஞானசம்பந்தம் தலைமையில் முருகு பாண்டியன் அவர்களின் 'அபாய அறிவிப்பு' என்னும் கலை நிகழ்ச்சி நடைபெறும்)

**கரம்பக்குடி**

நகர தி.மு.க. மற்றும் துணை மன்றங்களின் சார்பில் மாலை 6 மணிக்கு வள்ளுவர் திடலில்: தலைவர்: எஸ். ஐ. எம். அனீபா; பேசுவோர்: எம்.எம். பீர்முகம்மது, ஈ. சையித் சாகும் அமீது மற்றும் பலர்.

அறநிலைய அமைச்சர்

#### மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

செப். 20 காலை 10 மணி: திருப்பரங்குன்றம் அறநிலைய ஆட்சித்துறை அலுவலர் கருத்தரங்கு; மாலை 5 30 மணி: தோப்பூர் பேரூராட்சி மன்றப் பள்ளிக் கட்டடத் திறப்பு.

### நிகழ்ச்சிகள்

சென்னை—சைதைத் தொகுதி 112-வது வட்டம் சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் நமச்சிவாயபுரம் சி.ஐ.டி. காலனியில் அண்ணா பிறந்தநாள் விழா; 21—9—72 காலை 10 மணிக்கு ஆர். கதிர்வேல் தலைமையில் -- சி.வி. மலையன் கொடியேற்றுவார்; மு. வேலாயுதம் உணவு வழங்குவார்; பேசுவோர்: சா. முத்து, டி. வி. அதிகாயமூர்த்தி, அ. கந்தன், கே. இராசு, கோ. வி. இராசன், ம. துரை, மு. பக்கிரிசாமி, ந. கதிர்வேல் மற்றும் பலர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் வைத்துக் கொள்வோம்; அந்த ஊழியருக்கு 12 சதவிகிதம் போனசு ரொக்கமாகவும் -- 3 சதவிகிதம் போனசு அவரது பிராவிடண்டு நிதிக் கணக்கில் டிபாசிட்டாகவும் அளிக்கப்படும் என்பதே மத்திய அமைச்சரவையின் முடிவாகும்.

## மீண்டும் அரசு பரிசீலிக்குமாம்

இரயில்வே, அஞ்சல் -- தந்தி, பாதுகாப்புத் தளவாடத் தொழிற்சாலைகள் போன்ற அரசுத்துறை நிறுவனங்களும் ஏதாவது ஒரு வகையில் போனசுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்ற ஊழியர்களின் கோரிக்கையை மூன்றாவது ஊதியக் குழு தனது அறிக்கையை அளித்த பின் அரசு மீண்டும் பரிசீலிக்கலாம்.

போனசு பற்றிய அரசின் இப்போதைய முடிவு, அரசுத் துறைகளால் நடத்தப்படும் நிறுவனங்களுக்குப் பொருந்தாது; இந்நிறுவனங்கள், போனசு சட்டத்தின் கீழும் கொண்டு வரப்படவில்லை.

இந்நிறுவனங்களின் ஊழியர்களை இதர தொழில்துறை ஊழியர்களிலிருந்து மாறுபட்ட முறையில் நடத்தக்கூடாது என்ற கோரிக்கையை அரசு முற்றிலும் எதிர்க்கவில்லை; ஆனால், இக்கோரிக்கையை மறுபரிசீலனை செய்யுமுன், ஊதியக்குழுவின் பரிந்துரைகளினால் இந்த ஊழியர்களுக்கு எந்த அளவு பலன் கிடைக்கின்றன என்பதை அரசு மதிப்பிட விரும்புவதாகத் தெரிகிறது.